**SET 6**

1. ஒழுக்கம், இறைச்சி – என்று பொருள்படுமாறு அமைந்த ஓரெழுத்து ஒருமொழிகள் முறையே
   (A) ஊ, நோ
   (B) யா, து
   (C) மை, து
   (D) கை, ஊ

2. இந்தியன் சஞ்சிகை, இந்தியாவின் தொல்பொருள் ஆய்வு முதலான ஏடுகளில் தமிழ்மொழி பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதியவர்
   (A) வீரமாமுனிவர்
   (B) ஜி.யு. போப்
   (C) கால்டுவெல்
   (D) பிரான்சிஸ் எல்லிஸ்

3. முடியரசனுக்குக் 'கவியரசு' எனும் பட்டத்தை வழங்கியவர்
   (A) காந்தியடிகள்
   (B) கவுந்தியடிகள்
   (C) குன்றக்குடி அடிகள்
   (D) இராமலிங்க அடிகள்

4. கவியரசு கண்ணதாசன் பற்றிய உண்மையான கூற்று எது?
   (A) 'மக்கள் கவிஞர்' என்று அனைவராலும் பாராட்டப் பெற்றவர்
   (B) தமிழக அரசின் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தவர்
   (C) மதுரை மாவட்டத்தைச் சார்ந்தவர்
   (D) இவரது இயற்பெயர் துரைமாணிக்கம்

5. 'நேதாஜி' என்ற பெயரில் வார இதழினை நடத்தியவர்
   (A) முத்துராமலிங்கத் தேவர்
   (B) பாலகங்காதர திலகர்
   (C) வல்லபாய் பட்டேல்
   (D) இராஜாஜி

6. பரிதிமாற் கலைஞரின் தமிழ்ப்புலமையையும் கவிபாடும் திறனையும் கண்டு, 'திராவிட சாஸ்திரி' என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கியவர்

(A) தேவநேயப் பாவாணர்

(B) சி.வை. தாமோதரனார்

(C) சி. இலக்குவனார்

(D) மறைமலையடிகள்

7. மதுரை சின்னப்பிள்ளை தொடங்கிய மகளிர் சுய உதவிக்குழு

(A) வானவில்

(B) கிராமியம்

(C) களஞ்சியம்

(D) வல்வில்

8. கூற்று : திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்டவர் இளங்குமரனார்.

காரணம் : விழிகளை இழக்க நேரிட்டால் கூட தாய்மொழியான தமிழினை இழந்துவிடக் கூடாது என்று எண்ணினார்.

(A) கூற்று, காரணம் – இரண்டும் சரி

(B) கூற்று-சரி, காரணம்-தவறு

(C) கூற்று-தவறு, காரணம்-சரி

(D) கூற்று, காரணம் – இரண்டும் தவறு

9. ஈரோடு தமிழன்பன் படைத்தளிக்காத இலக்கிய வடிவம்

(A) புதுக்கவிதை

(B) புதினம்

(C) ஹைக்கூ

(D) சிறுகதை

10. முதல் தமிழ்க்கணினியின் பெயர்

(A) திருவள்ளுவர்

(B) கபிலர்

(C) ஔவை

(D) பாரதி

11. இராவண காவியம் இயற்றப்பட்ட காலம்

(A) 20 ஆம் நூற்றாண்டு

(B) 19 ஆம் நூற்றாண்டு

(C) 18 ஆம் நூற்றாண்டு

(D) 17 ஆம் நூற்றாண்டு

12. கூற்று : பேச்சுத் தமிழில் அமைந்த நாட்டுப்புறப் பாடல்கள் 'பஞ்சக் கும்மிகள்' என்று அழைக்கப்பட்டன.

காரணம் : நாட்டில் பெரும்பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் மக்கள் பட்ட துயரங்களை அக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் கும்மிப் பாட்டாகப் பாடினர்.

(A) கூற்று சரி, காரணம் தவறு

(B) கூற்று தவறு, காரணம் சரி

(C) கூற்று மற்றும் காரணம் சரி

(D) கூற்று மற்றும் காரணம் தவறு

13. ஐம்பெருங்குழுவின் சரியான வரிசை முறை

(A) அமைச்சர், சடங்கு செய்விப்போர், படைத்தலைவர், தூதர், சாரணர்

(B) சடங்கு, செய்விப்போர், அமைச்சர், படைத்தலைவர், சாரணர், தூதர்

(C) அமைச்சர், படைத்தலைவர், சடங்கு செய்விப்போர், சாரணர், தூதர்

(D) அமைச்சர், படைத்தலைவர், சடங்கு செய்விப்போர், தூதர், சாரணர்

14. கலிங்கத்துப்பரணி பற்றிய சரியான கூற்று எது?

கூற்று 1 : போர் முனையில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றி கொண்ட வீரரைப் புகழந்து பாடுவது பரணியாகும்.

கூற்று 2 : இது பக்தி இலக்கிய வகைகளுள் ஒன்று.

(A) கூற்று 1 – சரி, 2 - தவறு

(B) கூற்று 1 மற்றும் 2 சரி

(C) கூற்று 1 – தவறு, 2 - சரி

(D) கூற்று 1 மற்றும் 2 தவறு

15. கோவிலை இறைவன் நீங்கியதற்குப் பாண்டிய மன்னன் கூறாத காரணம்

(A) மறையவர் ஒழுக்கம் குன்றினரோ

(B) தவம், தருமம் சுருங்கிற்றோ

(C) இல்லறனும் துறவறனும் தவறிழைத்தனரோ

(D) மந்திரிமார் கடமையில் தவறினரோ

16. நல்நிதியே திரு ஆலவாய் உடைய நாயகனே ........ என்னும் பாடல் வரி இடம் பெற்ற நூல்.

(A) தேவாரம்

(B) பெரியபுராணம்

(C) திருவிளையாடற்புராணம்

(D) சீறாப்புராணம்

17. "தாமம்" என்ற சொல்லின் பொருள்

(A) கயிறு

(B) முத்து

(C) மன்றம்

(D) மாலை

18. கூற்று 1 : மாங்குடி மருதனார் எட்டுத்தொகையில் பதின்மூன்று பாடல்களைப் பாடியுள்ளார்.

கூற்று 2 : இவர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்

(A) கூற்று 2 மட்டும் சரி

(B) கூற்று 1 மற்றும் 2 சரி

(C) கூற்று 1 தவறு 2 சரி

(D) கூற்று 1 மற்றும் 2 தவறு

19. 'பொன்னொடு வந்து கறியொடு பெயரும்' - இவ்வடிகள் இடம் பெறும் நூல்

(A) அகநானூறு

(B) குறுந்தொகை

(C) நற்றிணை

(D) கலித்தொகை

20. <u>நாம நீர்</u> வேலி உலகிற்கு அவன் அளிபோல் – என்பதில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்

(A) அச்சம் தரும் கடல்

(B) அச்சம் தரும் அணை

(C) அச்சம் தரும் ஓடை

(D) அச்சம் தரும் ஆறு

21. முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் – நித்தம்
இதில் இடம்பெற்றுள்ள சீர்மோனைச் சொற்களாவன

(A) மெத்த, வணிகலமும்
(B) முத்தமிழ், துய்ப்பதால்
(C) முத்தமிழ், முச்சங்கம்
(D) மேவலால், நித்தம்

22. அழகுணர்ச்சி, ஓலைச்சுவடி, வட்டெழுத்து, ஊழி, செப்பேடுகள் – சொற்களை அகரவரிசைப்படி சீர் செய்க.

(A) அழகுணர்ச்சி, ஊழி, ஓலைச்சுவடி, செப்பேடுகள், வட்டெழுத்து
(B) ஓலைச்சுவடி, அழகுணர்ச்சி, வட்டெழுத்து, ஊழி, செப்பேடுகள்
(C) செப்பேடுகள், வட்டெழுத்து, அழகுணர்ச்சி, ஊழி, ஓலைச்சுவடி
(D) அழகுணர்ச்சி, வட்டெழுத்து, ஊழி, செப்பேடுகள், ஓலைச்சுவடி

23. ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை
இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைச் சொற்களாவன

(A) ஆற்றுதல், அலந்தவர்க்கு
(B) ஆற்றுதல், போற்றுதல்
(C) பாடறிந்து, ஒழுகுதல்
(D) தன்கிளை, செறாஅமை

24. மருந்தே உண் விருந்தொடு ஆயினும் வாக்கு என்பது ஔவையார் – சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.

(A) மருந்தே விருந்தொடு ஆயினும் உண் ஔவையார் வாக்கு என்பது
(B) விருந்தொடு உண் ஆயினும் மருந்தே வாக்கு ஔவையார் என்பது
(C) ஔவையார் வாக்கு என்பது மருந்தே விருந்தொடு ஆயினும் உண்
(D) மருந்தே ஆயினும் விருந்தொடு உண் என்பது ஔவையார் வாக்கு

25. ஊர் கூடிச் செக்குத் தள்ள முடியுமா? என்று கேட்கிறார்கள். ஊர் கூடின பிறகுதான் செக்குத் தள்ள வேண்டும் என்று காத்திருப்பவர்களின் காரியம் கைகூடாது. புரோகிதருக்காக அமாவாசை காத்திருப்பதில்லை – இவ்வுரைநடையில் அமைந்துள்ள நயம்.

(A) எடுத்துக்காட்டு உவமை

(B) எதிரிணை இசைவு

(C) இணை ஒப்பு

(D) முரண்படு மெய்ம்மை

26. சந்திப்பிழையற்ற தொடரைக் காண்க.

(A) தொங்கான் நடுநடுங்கித் தாவி தாவி குதிக்கிறது

(B) சூறாவளி மாரியும், காற்றும் கூடிக்கலந்து ஆடிக் குதித்துக் கெக்கலித்தன

(C) மேக பொதிகள் பரந்து திரண்டொன்றி கும்மிருட்டாய் இறுகி நின்றன

(D) தொங்கான் அப்படியும் இப்படியுமாய்த் தாவி குதித்து விழுந்து திணறி தத்தளிக்கிறது

27. கம்பர் இராமனது வரலாற்றைத் தமிழில் வழங்கி, "இராமாவதாரம்" எனப் பெயரிட்டார். இவ்விடைத் தொடருக்குரிய வினாத் தொடரினை தெரிவு செய்க.

(i) இராமாவதாரம் என்பது என்ன?

(ii) கம்பர் எந்த நூலை எழுதினார்?

(iii) இராமனது வரலாற்றைத் தமிழில் வழங்கி இராமாவதாரம் எனப் பெயரிட்டவர் யார்?

(A) (i), (ii), (iii) சரி

(B) (i), (ii) மட்டும் சரி

(C) (ii) மட்டும் சரி

(D) (iii) மட்டும் சரி

28. காடு பொருள்கொடுக்கும்
காய்கனி ஈன்றெடுக்கும்
கூடிக் களித்திடவே - கிளியே
குளிர்ந்த நிழல் கொடுக்கும்

- இப்பாடலில் பயின்று வரும் இயைபுச் சொற்களாவன

(A) காடு, காய்கனி

(B) கூடி, குளிர்ந்த

(C) பொருள் கொடுக்கும், நிழல் கொடுக்கும்

(D) குளிர்ந்த, நிழல் கொடுக்கும்

29. பனை மரமே பனை மரமே

ஏன் வளந்தே இத் தூரம்?

குடிக்கப் பதனியானேன் !

கொண்டு விற்க நுங்கானேன் !

- இப்பாடலில் இடம் பெற்றுள்ள இயைபு நயம்

(A) பனை, மரமே

(B) பதனியானேன், நுங்கானேன்

(C) குடிக்க, பதனியானேன்

(D) விற்க, நுங்கானேன்

30. “வால்காவிலிருந்து கங்கை வரை” என்ற நூலை தமிழில் மொழி பெயர்த்தவர்

(A) கணமுத்தையா

(B) வாணிதாசன்

(C) மு. மேத்தா

(D) ராகுல் சாங்கிருத்யாயன்

31. பொருத்துக :

(a) நாளுக்கு ஒரு முறை மலர்வது — 1. குறிஞ்சி

(b) ஆண்டுக்கு ஒரு முறை மலர்வது — 2. சண்பகம்

(c) பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை மலர்வது — 3. மூங்கில்

(d) தலைமுறைக்கு ஒரு முறை மலர்வது — 4. பிரம்மகமலம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 1 | 2 | 4 | 3 |
| (D) | 3 | 1 | 2 | 4 |

32. பொருத்துக :

(a) மலர் உற்பத்தி — 1. கரூர்

(b) பின்னலாடை — 2. கோயம்புத்தூர்

(c) கைத்தறி நெசவு — 3. திருப்பூர்

(d) பஞ்சாலைகள் — 4. திண்டுக்கல்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 1 | 4 | 2 | 3 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 2 | 4 | 3 | 1 |

33. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | தாள் | 1. | கீரை |
| (b) | தண்டு | 2. | கேழ்வரகு |
| (c) | கோல் | 3. | புதர் |
| (d) | தூறு | 4. | நெட்டி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 1 | 3 | 2 | 4 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

34. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | நாம் ஏன் தமிழ் காக்க வேண்டும் | 1. | எஸ். ராமகிருஷ்ணன் |
| (b) | பச்சை நிழல் | 2. | ச. தமிழ்ச் செல்வன் |
| (c) | உலகின் மிகச்சிறிய தவளை | 3. | முனைவர் சேதுமணி மணியன் |
| (d) | அன்றாட வாழ்வில் அறிவியல் | 4. | உதயசங்கர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 3 | 1 | 2 | 4 |

35. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | இயற்கைக் கருவி | 1. | மத்தளம் |
| (b) | மணற்கடிகார வடிவம் | 2. | குடமுழா |
| (c) | முதற்கருவி | 3. | சங்கு |
| (d) | பஞ்சமகாசப்தம் | 4. | திமிலை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

36. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | சில நேரங்களில் ஆண், பெண் வேடமிட்டு ஆடுவதும் உண்டு | 1. | ஒயிலாட்டம் |
| (b) | சுற்றி ஆடுதல், தாவி ஆடுதல், தலையைச் சாய்த்து ஆடுதல் | 2. | மயிலாட்டம் |
| (c) | காலில் சலங்கை, தலையில் ஒரே நிறத் துணியால் முண்டாசு, கையில் சிறு துணி | 3. | கரகாட்டம் |
| (d) | தலையிலும் இடையிலும் சிறுதுணி கட்டியும், காலில் சலங்கை அணிந்தும் ஆடுதல் | 4. | தேவராட்டம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 3 | 2 | 1 | 4 |

37. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | கடல்நீர் முகந்த கமஞ்சூழ் எழிலி | 1. | நற்றிணை |
| (b) | நெடு வெள்ளூசி நெடு வசி பரந்த வடு | 2. | திருவள்ளுவமாலை |
| (c) | திணையளவு போதாச் சிறுபுல் நீர் நீண்ட பனையளவு காட்டும் | 3. | கார் நாற்பது |
| (d) | கோட்சுறா எறிந்தெனச் சுருங்கிய நரம்பின் முடிமுதிர் பரதவர் | 4. | பதிற்றுப்பத்து |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

38. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய இது நீ கருதினை ஆயின் | 1. | தொல்காப்பியம் |
| (b) | தமிழென் கிளவியும் அதனோ ரற்றே | 2. | புறநானூறு |
| (c) | தமிழன் கண்டாய் | 3. | சிலப்பதிகாரம் |
| (d) | தமக்கென முயலா நோன்றாள் | 4. | தேவாரம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 3 | 1 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 1 | 4 | 2 | 3 |

39. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | தமிழ்ப் பல்கலைக்கழகம் | 1. | 1896 |
| (b) | உ.வே.சா நூலகம் | 2. | 1981 |
| (c) | கீழ்த்திசை நூலகம் | 3. | 1942 |
| (d) | கன்னிமரா நூலகம் | 4. | 1869 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

40. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | அலந்தவர் | 1. | உறவினர் |
| (b) | போற்றார் | 2. | வறியவர் |
| (c) | பேதையார் | 3. | பகைவர் |
| (d) | கிளை | 4. | அறிவற்றவர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

41. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | அரியவற்றுள் எல்லாம் அரிதே | 1. | ஒழுக்கமுடைமை |
| (b) | உலகத்தோடு ஒட்ட ஒழுகல் | 2. | கேள்வி |
| (c) | எஃகதனிற் கூரிய தில் | 3. | பெரியாரைத் துணைகோடல் |
| (d) | அவியினும் வாழினும் என் | 4. | பொருள் செயல் வகை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

42. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | கரும்பு | 1. | ஒலிக்கும் |
| (b) | நரலும் | 2. | சுற்றம் |
| (c) | வயிரியம் | 3. | பள்ளம் |
| (d) | படுகர் | 4. | கூத்தர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

43. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | படைத்தலைவர் | 1. | பல மொழி பேசும் மக்கள் |
| (b) | கடைக்காப்பாளர் | 2. | ஐம்பெருங்குழு |
| (c) | பாடைமாக்கள் | 3. | சமயவாதிகள் |
| (d) | சமயக்கணக்கர் | 4. | எண்பேராயம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

44. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | இருநிதி | 1. | உரிச்சொல் |
| (b) | மாநிலம் | 2. | அடுக்குத் தொடர் |
| (c) | கைதொழுது | 3. | பண்புத்தொகை |
| (d) | மேலும்மேலும் | 4. | வேற்றுமைத் தொகை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 1 | 4 | 2 | 3 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

45. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | மாணிக்கம் | 1. | தொழிற்பெயர் |
| (b) | நாழிகை | 2. | பொருட்பெயர் |
| (c) | விளம்புதல் | 3. | சினைப்பெயர் |
| (d) | போது | 4. | காலப்பெயர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

46. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | அபிஷேகம் | 1. | வழிபாடு |
| (b) | கும்பாபிஷேகம் | 2. | கூட்டு வழிபாடு |
| (c) | பஜனை | 3. | குடமுழுக்கு |
| (d) | தீபாராதனை | 4. | நீராட்டு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

47. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | உவமை | 1. | Combination |
| (b) | உருவகம் | 2. | Rhyme |
| (c) | புணர்ச்சி | 3. | Parable |
| (d) | இயைபு | 4. | Metaphor |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

48. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | கடும்பு | 1. | கூத்தர் |
| (b) | ஆரி | 2. | சுற்றம் |
| (c) | வயிரியம் | 3. | அருமை |
| (d) | பொம்மல் | 4. | சோறு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 1 | 2 | 4 | 3 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

49. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | மட்பாண்டம் | 1. | தோன்றல் விகாரம் |
| (b) | மரவேர் | 2. | இயல்பு புணர்ச்சி |
| (c) | மணிமுடி | 3. | கெடுதல் விகாரம் |
| (d) | கடைத்தெரு | 4. | திரிதல் விகாரம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 1 | 4 | 3 | 2 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

50. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | பசுமரத்தாணி போல | 1. | அறிஞர் அண்ணாவின் புகழ் பாரெங்கும் ஒளி வீசுகின்றது |
| (b) | குன்றின் மேலிட்ட விளக்கு போல | 2. | என் இளமைக்கால செயல்கள் நெஞ்சில் ஆழமாகப் பதிந்துள்ளன |
| (c) | அடியற்ற மரம் போல | 3. | ஆசிரியர் நடத்திய பாடம் தெளிவாகப் புரிந்தது |
| (d) | உள்ளங்கை நெல்லிக்கனி போல | 4. | மாறன், தன் நிறுவனம் மூடப்பட்ட செய்தி கேட்டு அதிர்ந்தான் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

FOR ROUGH WORK